Australian Electoral Commission

Tamil/தமிழ்

# உங்கள் உத்தியோகபூர்வவழிகாட்டி

## 2025 ‘ஃபெடரல்’ தேர்தலுக்குரியது

### சனிக்கிழமை 3 மே 2025

**வாக்களிப்பு கட்டாயமானது**

18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆஸ்திரேலியர்களுக்கு.




## ஆஸ்திரேலியாவின் கட்டமைப்பிற்கு உங்கள் வாக்கு உதவும்

# பதில் தேர்தல் ஆணையரின் **செய்தி**

இந்த வழிகாட்டியில், தகவல் மூலங்களை எவ்வாறு சரிபார்ப்பது மற்றும் உங்கள் வாக்கு கணக்கில் எடுக்கப்படச் செய்வது எப்படி, வாக்குச் சாவடியில் என்ன நடக்கிறது என்பவற்றை விளக்குகின்றதும் மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் குறிப்புகளும் அடங்கியுள்ளன.

தேர்தல் தினத்தன்று நாடு முழுவதும் வாக்குச் சாவடிகளை நாம் திறந்து வைத்திருப்போம், அத்துடன் சமூகங்கள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு ஆதரவுதவியளிக்கும் வகையில் மற்ற வாக்களிப்பு விருப்பத் தெரிவுகளும் இருக்கும்.

உங்கள் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படுவது முதல் எண்ணப்படும் வரை தேர்தல் செயன்முறையின் ஒவ்வொரு படிமுறையின் போதும், உங்கள் வாக்குகளைப் பாதுகாத்து நாங்கள் **நேர்மையான** ஒரு தேர்தல் செயல்பாட்டை வழங்குகிறோம் என்பதில் நீங்கள் திடநம்பிக்கை கொள்ளலாம்.

வலுவான கருத்துப் பரிமாற்றமானது தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும், மேலும் நீங்கள் பெறும் அனைத்து தகவல்களையும், குறிப்பாக எமது நன்கு நிறுவப்பட்ட தேர்தல் செயல்முறையை கேள்விக்குள்ளாக்கும் தகவல்களை கவனமாக பரிசீலிக்கும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன்.

**அது அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நம்பகமான வளஆதாரத்திலிருந்து வந்ததா என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்** பதில் இல்லை என்றால், எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே எனது பரிந்துரை.

நீங்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லும்போது, வாக்களிக்கும் செயல்முறையில் உங்களுக்கு உதவும் எங்கள் ஊழியர்கள் தினசரி ஆஸ்திரேலியர்களே என்பதை நினைவில் கொள் ளுங்கள்.

இந்தத் தேர்தலில் உங்கள் கருத்தை எப்படித் தெரிவிக்கலாம் என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு செல்க **aec.gov.au**

**Jeff Pope**
பதில் தேர்தல் ஆணையர்

**97%** இற்கும் அதிகமான
அதிகமான தகுதிபெற்ற வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளனர்

**7,000+**
வாக்களிப்பு நிலையங்கள்

**500+**
முன்கூட்டிய வாக்களிப்பு நிலையங்கள்

**100,000+**
தற்காலிக தேர்தல் பணியாளர்கள்

# நில், கவனி

## இந்த 'ஃபெடரல்' தேர்தலில் வளஆதாரத்தை சரிபார்த்துக் கொள்ளவும்

இந்த 'ஃபெடரல்' தேர்தல் காலத்தில் உங்கள் வாக்களிப்பில் செல்வாக்குச் செலுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட பாரிய அளவிலான தகவல்கள் பரவ விடப்படுகின்றன.

பல்வேறு வளமூலங்களிலிருந்து தகவல்கள் வருகின்றமை ஜனநாயக செயல்பாட்டின் ஒரு முக்கிய அங்கமாகும். இது வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் எனையோர் தங்கள் கொள்கைகள் மற்றும் நம்பிக்கைகளை வாக்காளர்களுடன் பரிமாறிக்கொள்வதற்கான ஒரு வழியை வழங்குகிறது.




இருப்பினும், சில தகவல்கள் வேண்டுமென்றே தவறானதாகவோ அல்லது தவறாக வழிநடத்துவதாகவோ இருக்கலாம். 'ஃபெடரல்' தேர்தல் தொடர்பாக நீங்கள் பார்க்கின்ற, கேட்கின்ற மற்றும் வாசிக்கின்றவற்றைக் கவனமாக நோக்குவது முக்கியம்.

பின்வருவானவற்றைக் கருத்தில் கொள்ள நேரம் ஒதுக்குங்கள்:

- தகவல் **எங்கிருந்து** வந்தது? இது நம்பகரமான ஊடகத்திலிருந்து அல்லது அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கிலிருந்து வந்ததா?
- இது **எப்போது** வெளியிடப்பட்டது? தொடர்ந்தும் மிகச் சரியானதாக இல்லாத பழைய தகவல், புதிய தகவல் போன்று பகிரப்படலாம்
- உங்களுக்கு உறுதியாக தெரியவில்லை என்றால் **சரிபார்த்துக் கொள்ளவும்**. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் வாக்களிக்கும் செயல்முறையைப் பற்றிய தவறான தகவல்களை உருவாக்குவதை எளிதாக்குகிறது.

'ஃபெடரல்' தேர்தல் செயல்முறை பற்றி உங்களுக்குத் சந்தேகமான ஏதும் இருந்தால், AEC-யிடம் கேளுங்கள். சமூக ஊடகங்களிலும் ஆன்லைனிலும் நீங்கள் காணக்கூடிய தகவல்கள் விடயத்தில் இது மிகவும் முக்கியமானது. மேலதிக தகவல்கள் மற்றும் பயனுள்ள உதவிக்குறிப்புகளைக் கொண்ட சிறிய காணோளிகளுக்கும் **aec.gov.au/stopandconsider** இற்குச் செல்லவும்.

# தேர்தல் தினம் சனிக்கிழமை 3 மே 2025

## வாக்களிப்பு நிலையங்கள் காலை 8 மணிக்கு திறக்கப்பட்டு சரியாக மாலை 6 மணிக்கு மூடப்படும்

பிரதிநிதிகள் சபையிலும் செனட்டிலும் தங்கள் கருத்துக்களையும் எதிர்பார்ப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக வாக்காளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு 'ஃபெடரல்' தேர்தல் நடத்தப்படுகிறது. வாக்களிப்பது பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில விடயங்கள் இதோ.

### யார் வாக்களிக்க வேண்டும்?

18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்து ஆஸ்திரேலிய குடிமக்களும் கட்டாயமாக 'ஃபெடரல்' தேர்தல்களில் பதிவு செய்து வாக்களிக்க வேண்டும்.

### நான் எங்கே வாக்களிக்கலாம்?

தேர்தல் தினத்தில் உங்கள் மாநிலம் அல்லது டெரிட்டரிப் பகுதியில் உள்ள எந்த வாக்குச் சாவடியிலும் நீங்கள் வாக்களிக்கலாம். வாக்குச் சாவடிகள் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும்.

வாக்குச் சாவடிகள் பொதுவாக உள்ளூர் பள்ளிகள், தேவாலயங்கள் மற்றும் சமூக மண்டபங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்களில் அமைந்திருக்கும்.

உங்கள் அருகிலுள்ள வாக்குச்சாவடியைக் கண்டறிய **aec.gov.au/where** ஐப் பார்வையிடவும்.

### எனக்கு உதவி தேவைப்பட்டால் என்ன செய்வது?

உங்களுக்கு நடமாடுதல் கட்டுப்பாடு அல்லது இயலாமை இருந்தால், அல்லது அத்தகைய ஒருவரை கவனித்துக் கொள்பவராக இருந்தால், அத்தைகையோர் செல்வதற்கான வசதிகளுள்ள வாக்குச் சாவடிகளின் விவரங்களை **aec.gov.au/where** இல் பார்க்கலாம்.

பார்வையற்றவர்கள் அல்லது பார்வைக் குறைபாடு உள்ள வாக்காளர்களுக்கு உதவக்கூடிய வாக்களிப்பு விருப்பத் தெரிவுகள் உள்ளன. **aec.gov.au/assistance** -இற்குச் செல்க அல்லது **13 23 26** -இல் அழைக்கவும்.



### நான் வேறொரு மாநிலத்தில் அல்லது டெரிட்டரியில் இருந்தால் என்ன செய்வது?

தேர்தல் தினத்தன்று நீங்கள் வேறொரு மாநிலத்தில் இருப்பீர்களாயின் நிருணயிக்கப்பட்டுள்ள பிற மாநில வாக்களிப்பு நிலையமொன்றில் நீங்கள் வாக்களிக்கலாம் அல்லது முன்கூட்டிய வாக்களிப்பதற்கான தெரிவுகளைக் கருத்தில் கொள்ளலாம்.

### தேர்தல் தினத்தன்று என்னால் வாக்களிக்க முடியாதென்றால் என்ன செய்வது?

தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையமொன்றிற்கு உங்களால் செல்ல முடியாவிட்டால், தேர்தலுக்கு முன்பாக முன்கூட்டியே வாக்களிக்க அல்லது தபால் மூலம் வாக்களிக்க நீங்கள் தகுதி பெறக்கூடும்.

#### தேர்தலுக்கு முன்பு எப்படி நேரடியாக வாக்களிப்பது?

தகுதி பெறுவீர்களாயின் தேர்தல் தினத்திற்கு முன்னதாக நீங்கள் வாக்களிக்கலாம். முன்கூட்டிய வாக்களிப்பு நிலையங்கள் **ஏப்ரல் 22 செவ்வாய் 2025** முதல் திறந்திருக்கும். அவை திறந்திருக்கும் நேரங்களும் திகதிகளும் வேறுபட்டிருக்கும், எனவே ஒவ்வொரு வாக்களிப்பு நிலையம் பற்றிய விபரங்களை அறியச் செல்க: **aec.gov.au/where**

முன்கூட்டிய வாக்களிப்பு மற்றும் தகுதி என்பன உட்பட மேலதிக விபரங்களை அறியச் செல்க: **aec.gov.au/early** அல்லது **13 23 26** எனும் இலக்கத்தினை அழைக்க.

#### தபால் மூலம் முன்கூட்டியே எப்படி வாக்களிப்பது?

தகுதியான வாக்காளர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்கும் வசதி உள்ளது. உங்கள் தகுதியைச் சரிபார்த்து ஆன்லைன் மூலம் **aec.gov.au/pva** இல் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள், **ஏப்ரல் 30 புதன்கிழமை 2025 மாலை 6 மணிக்கு முன்னதாக** AEC - ஐ சென்றடைதல் அவசியமாகும்.

உங்களுக்கு இணைய வசதி அணுகல் இல்லையென்றாலோ மற்றும் அஞ்சல் வாக்கிற்கு விண்ணப்பிக்க விரும்பினாலோ **13 23 26** - ஐ அழைக்கவும்.

நீங்கள் ஒரு அரசியல் கட்சி அல்லது பிற அமைப்பிலிருந்து தபால் மூல வாக்கு விண்ணப்பத்தைப் பெறலாம். மூன்றாம் தரப்பினர் இந்த விண்ணப்பங்களை வீடுகளுக்கு அனுப்ப அனுமதிக்கப்பட்டுள்ளார்கள், ஆனால் நீங்கள் அவற்றைப் பயன்படுத்த வேண்டியதில்லை. தபால் மூல வாக்குப் பொதிக்கு நீங்கள் நேரடியாக AEC க்கு விண்ணப்பிக்கலாம்.

### நான் எந்தத் தேர்தல் தொகுதியில் இருக்கின்றேன்?

நீங்கள் எந்த தேர்தல் தொகுதியில் வசிக்கிறீர்கள் என்பதை **aec.gov.au/electorate** இல் பார்க்கலாம்.

உங்கள் தேர்தல் தொகுதியின் பெயர் அல்லது எல்லைகள் மறுபகிர்வு காரணமாக கடந்த ஃபெடரல் தேர்தலிலிருந்து மாறியிருக்கலாம். இதன் அர்த்தம் நீங்கள் வேறு தேர்தல் தொகுதியில் வாக்களிக்க வேண்டியிருக்கலாம் அல்லது உங்கள் வழக்கமான வாக்குச் சாவடி வேறு தேர்தல் தொகுதியில் இருக்கலாம்.

### நீங்கள் யாருக்கு வாக்களிப்பது என்பது உங்கள் முடிவாகும்

உங்கள் வாக்கை எவ்வாறு செலுத்துவது என்பது உங்கள் முடிவு மட்டுமே. வாக்குச் சாவடிக்கு வெளியே, வேட்பாளர் பிரதிநிதிகள் உங்களுக்கு 'எப்படி வாக்களிப்பது' என்ற அட்டைகளை வழங்கலாம், இது ஒரு குறிப்பிட்ட வழியில் வாக்களிக்க பரிந்துரைக்கும். 'எப்படி வாக்களிப்பது' என்ற அட்டைகளை நீங்கள் ஏற்கவோ பின்பற்றவோ தேவையில்லை.

வேறு கேள்வி உள்ளதா?
**aec.gov.au/faqs** -இற்குச் செல்லவும்

# வாக்களிப்பு நிலையத்தில் என்ன நடக்கும்?

நீங்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு வரும்போது, வாக்களிப்பு அதிகாரி ஒருவர் உங்களின் முழுப்பெயர், முகவரி மற்றும் நீங்கள் ஏற்கனவே 2025 தேர்தலில் வாக்களித்தீர்களா என்றும் கேட்பார்.

- வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரில் கோடிட்டுக் குறியிடப்படும்.
- உங்களுக்கு 'பிரதிநிதிகள் சபை'க்கான ஒரு வாக்குச் சீட்டும் 'செனட்'டிற்கான ஒரு வாக்குச் சீட்டும் வழங்கப்படும்.
- உங்கள் வாக்குச் சீட்டுகளை சரியாகப் பூர்த்தி செய்ய அறிவுறுத்தல்களை பின்பற்றவும் அல்லது வாக்களிப்பு அதிகாரியிடம் உதவி கேட்கவும்.
- உங்கள் வாக்குச் சீட்டுகளை பூர்த்தி செய்தவுடன், அவற்றை வாக்குப் பெட்டியில் போடவும்.
- நீங்கள் AEC பென்சிலைப் பயன்படுத்தியிருந்தால், வெளியே செல்லும் வழியில் உள்ள பெட்டியில் அதை போடவும்.

சுகாதார பராமரிப்பு ஊக்குவிக்கப்படுவதோடு கை சுத்திகரிப்பானும் வழங்கப்படும்.

## உங்களுக்கு உதவ எங்கள் ஊழியர்கள் உள்ளனர். தயவுசெய்து மரியாதையுடன் நடந்து கொள்ளுங்கள்.




# உங்கள் வாக்கு கணக்கில் எடுக்கப்படச் செய்வது எப்படி

உங்களுக்கு இரண்டு வாக்குச் சீட்டுகள் வழங்கப்படும். சிறிய பச்சை நிறத்திலானது 'பிரதிநிதிகள் சபை'க்கானது மற்றும் பெரியளவிலான வெள்ளை நிறத்திலானது 'ஸெனட்'டிற்குரியது. **இரண்டு வாக்குச் சீட்டுகளையும் நீங்கள் கட்டாயம் நிரப்பவேண்டும்.** பச்சை நிற வாக்குச் சீட்டில் 'பிரதிநிதிகள் சபை'க்கான உங்கள் உள்ளூர் பகுதி அல்லது தொகுதிப் பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள். வெள்ளை நிற வாக்குச் சீட்டில் 'ஸெனட்'டிற்கான உங்கள் மாநில அல்லது எல்லைப் பிராந்தியப் பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.

## பிரதிநிதிகள் சபை

பச்சை நிற வாக்குச் சீட்டில் உங்கள் விருப்பு ஒழுங்கு வரிசைப்படி **ஒவ்வொரு பெட்டியிலும்** இலக்கமிடவும். உங்கள் முதல் தெரிவாக இருக்கும் வேட்பாளருக்கு '1' என்ற எண்ணையும், இரண்டாவது தெரிவாக இருக்கும் வேட்பாளருக்கு '2' என்ற எண்ணையும், இட்டு எல்லாப் பெட்டிகளிலும் முறையே இலக்கமிடவும்.




மாதிரி வாக்குச் சீட்டு

AEC யின் வலைத்தளத்தில் வாக்களிப்பது எப்படி என்பதை நீங்கள் பயிற்சி செய்யலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா? **aec.gov.au/practise** என்ற வலைத்தளத்திற்குச் செல்க

## ஸெனட்


வெள்ளை நிற வாக்குச் சீட்டில் வாக்களிப்பதற்கு இரண்டு தெரிவுகள் உள்ளன.

**‘ஒன்றில்’**

### கோட்டிற்கு மேலே

கோட்டிற்கு மேலே நீங்கள் வாக்களிக்கத் தீர்மானிப்பதாயின் நீங்கள் **குறைந்தது 6 பெட்டிகளில் இலக்கமிட** வேண்டும்.

உங்கள் முதல் தெரிவுக்குரிய கட்சியின் அல்லது குழுவியின் பெட்டியில் ‘1’ என்றும் இரண்டாம் தெரிவுக்குரியதில் ‘2’ என்றும் தொடர்ந்து குறைந்தது 6 பெட்டிகளில் இலக்கமிடவும். கோட்டிற்கு மேலே நீங்கள் விரும்புகின்ற அத்தனை பெட்டிகளிலும் உங்கள் விருப்பத் தெரிவுக்கு ஏற்ப தொடர்ந்தும் நீங்கள் இலக்கமிடலாம்.





மாதிரி வாக்குச் சீட்டு

**‘அல்லது’**

### கோட்டிற்குக் கீழே

கோட்டிற்குக் கீழே நீங்கள் வாக்களிக்க விரும்புதாயின், **குறைந்தது 12 பெட்டிகளிலேனும்** 1 இலிருந்து 12 வரை உங்கள் தெரிவின் ஒழுங்கு வரிசைப்படி ஒவ்வொரு வேட்பாளருக்கும் நீங்கள் இலக்கமிட வேண்டும். கோட்டிற்கு கீழே நீங்கள் விரும்புகின்ற அத்தனை பெட்டிகளிலும் உங்கள் விருப்பத் தெரிவுக்கு ஏற்ப தொடர்ந்தும் நீங்கள் இலக்கமிடலாம்.




மாதிரி வாக்குச் சீட்டு

**நீங்கள் ஏதும் தவறு செய்துவிட்டால் கவலைப்பட வேண்டியதில்லை.**
இன்னொரு வாக்குச் சீட்டை கேட்டுப் பெற்று மீண்டும் நீங்கள் ஆரம்பிக்கலாம்.

# உங்கள் உத்தியோகபூர்வ வழிகாட்டி
## 2025 'ஃபெடரல்' தேர்தலுக்குரியது
### சனிக்கிழமை 3 மே 2025

# இந்த வழிகாட்டியின் **மாற்று வடிவங்கள்**

### அணுகத்தக்க தகவல்

பார்வையற்ற அல்லது பார்வை குறைபாடுடைய வாக்காளர்களுக்கு, இந்த அதிகாரப்பூர்வ வழிகாட்டி AEC-இன் இணையதளத்தில் பெரிய அச்சு, மின்-எழுத்து வடிவம் மற்றும் ஆடியோ கோப்புகளில் **aec.gov.au/assistance** -இல் கிடைக்கிறது.

இந்த வடிவங்கள், அத்துடன் 'பிரெய்லி' போன்றவற்றை **13 23 26** இற்கு அழைப்பதன் மூலம் கோரலாம்.

நீங்கள் காது கேளாதவராக இருந்தால் அல்லது செவிமடுப்பதில் சிரமமிருந்தால், 'தேசிய ரிலே சேவை' (NRS) மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும்:

Auslan (ஆஸ்திரேலிய சைகைக் குறி) உரைபெயர்ப்பு சேவைகளும் கிடைக்கும். மேலதிக தகவல்களுக்கு AEC –இன் வலைத்தளத்திற்குச் செல்க.




### பிற மொழிகளில் உள்ள தகவல்கள்

இவ்வழிகாட்டியின் மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகளை 34 மொழிகளில் **aec.gov.au/translated** என்ற வலைத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

தொலைபேசி உரைபெயர்ப்பு சேவைகளும் உள்ளன. வாக்களிப்பு மற்றும் தேர்தல்கள் பற்றிய தகவல்களைப் பெற **1300 720 153** இல் அழைத்து தமிழில் பேச வேண்டுமெனக் கேட்கவும்.

18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சகல ஆஸ்திரேலியப் பிரசைகளுக்கும் வாக்களிப்பு கட்டாயமானது. நீங்கள் வாக்களிக்காவிட்டால் உங்கள் மீது வழக்குத் தொடரப்படலாம். ஒரு முறைக்கு அதிகமாக வாக்களிப்பது சட்ட விரோதமான குற்றச் செயலாகும்.

24-2017

**aec.gov.au** 13 23 26

AEC Australian Electoral Commission

தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது, 10 மோர்ட் தெரு, கான்பெரா
Authorised by the Electoral Commissioner, 10 Mort Street, Canberra